# தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம்: தமிழில் ஒளிபரப்பப்படும் நாடகத் தொடரை அடிப்படையாகக் கொண்டதொரு ஆய்வு

**வடிவேல் இன்பமோகன்,**
நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.
vinpamohan@yahoo.com.

**ஆய்வுச் சுருக்கம்:**

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் எமக்கு கிடைத்த ஒன்றாக தொழில்நுட்பக் கலைகள் விளங்குகின்றன. தொழில்நுட்பக் கலைகளில் ஒன்றான தொலைக்காட்சியின் வருகை கலைத்துறையில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தொலைக்காட்சியால் பல சாதகமான விளைவுகள் ஏற்பட்டுள்ளது போல் பாதகமான விளைவுகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வாய்வு தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் சமூகத்தில் ஏற்பத்தியுள்ள பாதகமான விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு முயற்சியாக அமைகின்றது. தொலைக்காட்சித் தொடர்நாடகங்களின் தன்மை, அது சமூகத்தில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது, மக்களுக்கு பிரயோகமான முறையில் தொலைக்காட்சித் தொடர்நாடகங்கள் அமைய வேண்டுமானால் அவை எவ்வாறான விடயப்பொருளைப் பேசவேண்டும், அதன் காட்சிப்புல யதார்த்தம் எவ்வாறானதாக கட்டமைக்கப்பட வேண்டும் என்பனவற்றை நோக்காகக் கொண்டுள்ளது. இது சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வாக அமைவதால் பண்புசார் ஆய்வு முறையியல் (Qualitative research design) இவ்வாய்வில் கையாளப்படுகின்றது.

***பிரதான சொற்பதங்கள்**: தொழில்நுட்பக்கலை, தொலைக்காட்சி, தொடர்நாடகங்கம், இரசனை, சின்னத்திரை.*

## 1. Introduction

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி எமக்கு வழங்கிய ஒன்றாக தொழில்நுட்பக் கலைகள் விளங்குகின்றன. தொழில்நுட்பத்தின் வருகை புகைப்படக்கலை, சினிமா, தொலைக்காட்சி என்னும் தொழில்நுட்பக் கலைகளை எமக்கு அறிமுகப்படுத்தியதுடன் ஏனைய கலைகளின் வளர்ச்சியிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. ஏனைய கலைவடிவங்கள் புதிய உத்வேகத்தைப் பெற்று வளர்ச்சியடைந்ததுடன் அவற்றில் தொழில்நுட்பச் சாதனங்களின் பயன்பாடும் அதிகரித்தது (சிவத்தம்பி.கா, (ஆண்டு?) பக். 24 – 27).

தொழில்நுட்பக் கலைச் சாதனங்களின் வருகையுடன் மன்னர்களினதும் பிரபுக்களினதும் இரசனைக்கும் செயற்பாட்டிற்கும் உரியதாக கலை இருந்த நிலை மாறி கலையாக்க, நுகர்வுச் செயற்பாடானது உயர்ந்தோர் முதல் சாதாரண மக்கள் வரை சென்றடைவதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது. பல நன்மைகளை தொழில்நுட்பக் கலைகளின் வரவால் நாம் அடைந்தாலும் சில தீமைகளும் ஏற்பட்டுள்ளன. இதனை தொழில்நுட்பக்கலைகளில் ஒன்றான தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளில் ஒன்றான தமிழ் தொலைக்காட்சித் தொடர்நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

## 2. Methodology

இது ஒரு சமூகச் சூழல்சார்ந்த ஒரு ஆய்வாக விளங்குவதன் காரணமாக இவ்வாய்வில் பண்புசார் ஆய்வு முறையியல் (Qualitative research design) பயன்படுத்தப்படுகின்றது. அவதானித்தல் (Observation), பங்குகொள்ளல் முறை (Participated method), நேர்காணல் (Interview), குழுநிலையிலான கலந்துரையாடல் என்பன ஆய்விற்கான கருவிகளாககப் (Research tools) பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாய்வு நுட்பமா தெரிந்தெடுக்கப்பட்ட எழுமாற்றான மாதிரிகள் (selected random samples) பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாய்வுக்கான தகவல்கள் சேகரிப்பிற்காக ஆறு மாதங்கள் செலவிடப்பட்டன (15.02.2016 – 14.07.1016). இவ்வாய்வு இலங்கைத் தமிழ் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் இந்தியத் தமிழ் தொலைக்காட்சித் தொடர் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டது.

## 3. Results and Discussion

தொழில்நுட்பக் கலைகளினுள்ளே சினிமா மக்கள் மத்தியில் பிரபல்யத்தைப் பெற்ற கலைகளில் குறிப்பிடத்தக்கது. சினிமாவின் பிரவேசத்தால் கலைத்துறையில் பொருளாதார உற்பத்தியாக கலைத்துறையை நோக்கும் நிலை வலுப்பெற்றது. இந்தியச் சூழலில் இந்நிலை ஆழமாக உணரப்பட்டது. இந்தியச் சூழலில் பொருளாதார நோக்கத்திற்காக சினிமாவைப் பயன்படுத்தியதன் இன்னொரு பரிமாணமாகவே "சின்னத்திரை" என அழைக்கப்படும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்களின் வரவைக் குறிப்பிடவேண்டும்.

தொலைக்காட்சி தொடர் நாடகங்களின் தயாரிப்பில் வர்த்தக நோக்கம் மேலோங்கியிருப்பதால் அதன் மூலம் சமூகத்திற்கு பல பாதகமான விளைவுகள் ஏற்படுகிறது. இவ் ஆய்வு தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் சமூகத்தில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன என்பதை வெளிப்படுத்தும்.

இலங்கையைப் பொறுத்தவரை ஆரம்ப காலங்களில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மாத்திரமே மும்மொழியிலுமான ஒளிபரப்பையும் ஒரே அலைவரிசையில் மட்டுப்படுத்தப்பட்ட நேர அளவில் வழங்கியது. ஒளிபரப்புத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாக இன்று MTV, சக்தி TV, சிரச TV, ITN, சொர்ணவாஹினி, நேத்திரா, TNL என பல ஒளிபரப்புப் பிரிவுகள் மக்களின் இரசனைக்கேற்ற விதத்தில் ஏற்படுத்தப்பட்டன. இதனைவிட செயற்கைக் கோள் ஒளிபரப்புகளான (Sattelite Channels) வீடியோ கோண்(Videocom), டிஸ் TV (Dish TV), டாடா ஸ்கை(TATA Sky), சன்டிரக்ட் (sun direct) போன்ற ஒலிபரப்புகளும் இன்று மக்கள் ரசனைக்குரியனவாக விளங்குகின்றன.

மக்களுக்குரிய பயனுள்ள பொழுதுபோக்குச் சாதனமாக தொலைக்காட்சி அறிமுகமாகி சிறுவர்கள் முதல் வளர்ந்தவர்கள் வரை சகலரும் இரசிக்கத்தக்க விதத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பினாலும், இந்நிகழ்ச்சிகளுள் தொலைக்காட்சி நாடகத் தொடர்களை இரசிக்கும் மக்களுடன் ஒப்பிடும் போது ஏனைய நிகழ்ச்சிகளை இரசித்து தமது ஓய்வான நேரத்தை பயனுடையதாக்கி கொள்பவர்களின் எண்ணிக்கை குறைவானதே.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளில் மக்கள் விரும்பிப் பார்த்து ரசிப்பதாகவும், மக்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் தொலைக்காட்சி நாடகத் தொடர்கள் விளங்குகின்றன. இன்றைய சமூகச் செயற்பாட்டில் தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களின் எதிர்காலத்தையும் செப்பனிடுவதில் மக்கள் மிகவும் அவதானமாகவும் ஆர்வமாகவும் இருக்கின்றனர்.

இருந்தும் கற்றோர், பாமரர் என்ற பேதமின்றி பெரும்பான்மையோர் தொலைக்காட்சி நாடகத்தொடர்களினால் பாதிப்புக்குள்ளாகும் நிலையை அவதானிக்கமுடிகிறது. தொலைக்காட்சி மக்களை ஆக்கிரமித்துள்ளது வெளிப்படையாகப் புரியாதவிதத்தில் ஆக்கிரமித்துள்ளதே இதிலுள்ள அவலமாகும். இருந்தும் தொலைக்காட்சியை தமது பொழுதுபோக்குத் தேவைக்கேற்ப பயன்படுத்தும் மக்களும் உள்ளனர்.

தொலைக்காட்சி நாடகங்கள் காலை, மாலை என்னும் இருவேளையுமே அதிகளவில் ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன. அரை மணிநேரம் கொண்ட பல நாடகத் தொடர்கள் ஒளிபரப்பப்படுகின்றன. இந்நாடகத் தொடர்களில் உள்ள சிறப்பு சகலதும் மிக நீண்ட தொடராக விளங்குவதாகும். இவை மூன்று நான்கு வருடங்கள் கொண்ட ஒளிபரப்புத் தொடர்களாக விளங்குகின்றன. ஒரு தடவை நாடகத் தொடர்களைப் பார்த்தால் தொடராக முழுவதையும் பார்த்து முடிக்கத்தக்க விதத்தில் அவற்றின் வெளிப்பாட்டு உத்தி அமைந்திருக்கும். இவ்வீர்ப்பை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் நாடகத் தொடர்களைத் தயாரிப்பதில் தயாரிப்பாளர்கள் அவதானமாக இருப்பர்.

மக்களை ஈர்க்கத்தக்க விதத்திலேயே இந்நாடகங்களின் கதை வடிவமைக்கப்பட்டிருக்கும். இந்நாடகங்கள் மக்களுக்கு புதிய விடயங்கள் எவற்றையும் புனைந்து உருவாக்குவதில்லை. எமது சாதாரண வாழ்வில் பொருத்திப் பார்க்கமுடியாத, எமது வாழ்க்கையில் தவிர்த்து நடக்கவேண்டும் எனக் கருதும் யதார்த்தத்திற்கு முரணான அதிகற்பனை வாய்ந்த விடயங்களே இந் நாடகங்களின் கதைப்பொருளாக விளங்குகின்றது. கணவன் மனைவியருக்கு இடையேயேற்படும் முரன்பாடுகள்/பிரச்சினைகள், தகாத காதல் என இவை அமைந்திருக்கும். இக்கதையினூடே எந்நேரமும் அழுதுகொண்டே இருத்தல், பழிவாங்கும் வேட்கை போன்ற பண்புகளையும் அவதானிக்கலாம். இவை சமூகத்தின் உயர் விழுமியங்களைப் பேணுவதற்குப் பொருத்தமற்றவை என மக்கள் புறந்தள்ளி நடக்கும் விடயங்களாகவே விளங்குகின்றன.

மனிதர்கள் ஒவ்வொருவரும் குடும்பம் என்னும் அமைப்பிற்குள் உறுப்பினராகி அதன் வரையரைகளுக்கு கட்டுப்பட்டு வாழவேண்டும் என்பதில் ஆர்வம் உடையவர்கள். ஒவ்வொருவரின் வாழ்வும் குடும்ப அமைப்பை அடிப்படையாகக் கொண்டே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தாய், தந்தை, மக்கள், குழந்தைகள், தாத்தா, பாட்டி, மாமா, மாமி போன்ற உறுப்பினர்கள் ஒரு குடும்பத்தில் அங்கத்தவர்களாக உள்ளனர். இக்குடும்ப அமைப்பு எமது சமூகங்களில் இறுக்கமான உறவுடைய கட்டமைப்புடையதாக விளங்குகிறது.

தொலைக்காட்சித் தொடர்களின் கதையாடலின் மையமாக குடும்ப அமைபே விளங்குகின்றது. குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் ஈர்க்கக்கூடிய விதத்தில் பாத்திரங்கள் உருவாக்கப்பட்டு கதை நகர்த்தல் இடம்பெறும். இதனால் குடும்ப உறுப்பினர்கள் யாவரும் நாடகத்துடன் ஒன்றிவிடுவர். இது தொலைக்காட்சி நாடகத் தொடர்கள் ஒளிபரப்பாகும் நேரங்களில் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால் அமர வேண்டிய பரிதாபகரமான நிலைக்கு மக்களைத் தள்ளிவிடுகிறது.

இக்கட்டுரையின் அடுத்தநிலையில் மக்களைத் தன்பக்கம் வசீகரித்து வைத்திருக்கும் தொலைக்காட்சித் தொடர்கள் சமூகத்தில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுகின்றன என்பதை நோக்குவோம்.

தொலைக்காட்சி தொடர் நாடகங்களை சிறுவர்கள் முதல் வயதானவர்கள் வரை சகலரும் பார்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றார்கள். இதனால் கூடுதலாகப் பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்கள் ஆகும். மாலை 6.30 – 9.00 மணி வரையான நேர ஒளிபரப்பே சிறுவர்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. சிறுவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதற்கு இவ்வேளையே பயன்படுத்தப் படுகின்றது. இந்நேரத்தில்

வீட்டிலுள்ளோர் ஓய்வாக இருப்பதால் தொலைக்காட்சி பார்ப்பதில் அந்நேரத்தைச் செலவிட முயற்சிக்கின்றனர். இதனால் சிறுவர்களும் அவர்களுடன் இணைந்து தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் பார்ப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது. அவ்வாறு அன்றி சிறுவர்களுக்கு தொலைக்காட்சி நாடகத் தொடர் பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டாலும் சிறுவர்களால் கற்றலை சுயமாக மேற்கொள்ளக்கூடிய பொருத்தமான சூழமைவு வீட்டில் கிடைப்பதில்லை. ஏனெனில் வீட்டில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் அவர்களின் சிந்தனையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும்.

வளர்ந்தவர்களின் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் முழுவதையும் தவறாது பார்த்துவிடவேண்டும் என்னும் ஆர்வம் காரணமாக ஏற்படும் விளைவுகள் குடும்ப அமைப்பில் பல பாதிப்புக்களை ஏற்படுதம் காரணிகளில் அடுத்துக் குறிப்பிடத்தக்கது. இதனால் அவர்களின் நாளாந்த வாழ்வியல் விடயங்களை ஒழுங்காக மேற்கொள்வதில் பாதிப்புக்கள் ஏற்படுத்துகின்றன.

குடும்ப உறுப்பினர்கள் யாவரும் வீட்டில் ஓய்வாக இருக்கும் நேரமாக இரவுவேளை விளங்குகின்றது. இவ்வேளையிலேயே அவர்களின் குடும்ப உறவுகளைப் பேணுவதற்கான வாய்ப்புள்ளது. இவ்வேளையில் தொலைக்காட்சி தொடரில் நேரத்தை செலவிடுவதால் குடும்ப உறுப்பினர்கள் அன்னியொன்னியமாக தங்களுக்குள்ளே குடும்ப விடயங்களை பரிமாறிக் கொள்வதற்கான வாய்பில்லாது போகின்றது.

இக்கட்டுரையை முடிப்பதற்கு முன்னர் மக்களின் இரசனை உணர்வில் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் எவ்வாறானதொரு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்னும் நோக்குடன் பூர்த்திசெய்யலாம் எனக் கருதுகின்றேன்.

கலைப்படைப்பாக்கத்தின் நோக்கம் அதனை இரசித்து அதன் மூலம் கிடைக்கும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதாகும். இவ்வனுபவ நிலையானது நாம் சாதாரண வாழ்வில் பெற்றுக்கொள்ளும் அனுபவத்தில் இருந்து வேறுபட்டு மனதுக்கு புத்துணர்ச்சியளிப்பதாகவும், எமது மனச் சுமைகளைக் குறைப்பதாகவும், அன்பு, மனிதநேயம் போன்ற நற்குணங்களை ஏற்படுத்துவதாகவும், எம்மில் உள்ள பல்வேறு குறைபாடுகளை விரும்பாத இயல்புகளை தவிர்த்து மனிதரை சீரிய வாழ்க்கையோட்டத்தை நோக்கி வழிநடத்துவனவாகவும் அமைந்திருக்கும். கலைப்படைப்பு தரும் அழகியல் அனுபவம் பற்றிக் குறிப்பிடும் அவிநவகுத்தர் கலையனுபவம் "இன்பகரமானதொரு அனுபவம், ஆனந்தத்தில் அமிழ்ந்திருக்கும் நிலை" (Gnoli,Raniero, (1985) p.60) எனக் குறிப்பிடுவார். அரிஸ்ரோட்டிலலும் இதனை "ஒரு தூய்மையாக்கல் அனுபவம் அல்லது இனிமையான விடுதலை"( Aristotle, (1991 Edition) p.355) என குறிப்பிடுவார். இதன் மூலம் கலையனுபவம் என்பது மனிதருக்கு மகிழ்வூட்டலை, மனநிறைவைத் தருகின்ற ஒன்று என புரிந்து கொள்ளலாம்.

இவ்வனுபவ நிலையுடன் ஒப்புநோக்கி தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் எவ்வாறான அனுபவத்தைத் தருகின்றன என்னும் வினாவை எழுப்பினோமானால் அதற்கு எம்மிடம் பொருத்தமான பதில் இல்லாயென்றே குறிப்பிடலாம். தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் தரும் அனுபவம் சிறந்த கலைப்படைப்பொன்று ஏற்படுத்தும் கலையீர்ப்புக்கு சமமானதொன்றாக கொள்ள முடியாதது. இங்கு மக்களைக் கவரவேண்டும் என்பதற்காக மக்களின் பலவீனமான பகுதிகளை தூண்டிவிடுவதற்கேற்ற விதத்தில் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதனால் சிறந்த கலைப்படைப்பொன்றினூடாக நாம் பெற்று அனுபவித்ததாகக் கூறப்பட்ட அனுபவ நிலைகளை இங்கு பெறுவதற்கான வாய்ப்புக்கள் நிடைப்பதில்லை.

ஒரு இரசிகனின் இரசனை மட்டத்தை உயர்த்துவதில் அவன் பார்த்து இரசிக்கும் கலையின் தரமும் ஒரு காரணமாகிறது. பல்வேறு கலைகளையும் பார்த்து இரசித்த இரசிகன் இரசிப்பதன் மூலம் அவனுக்கு கிடைத்த பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு காலவோட்டத்தில் சிறந்த கலைகளை இனங்கண்டு இரசிப்பதற்கான பயிற்சியைப் பெறுவதுடன், தமது இரசனை மட்டத்தையும் உயர்த்திக் கொள்ளலாம். அவை மக்களுக்கு அவர்களின் வாழ்வியல் பிரச்சனைகளைில் இருந்து விடுபடத்தக்க சிறந்த அனுபவங்களை வழங்கும்.

## 4. Conclusions

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியால் எமக்கு கிடைத்த ஒரு கலைவடிவமாக தொலைக்காட்சி விளங்குகின்றது. தொலைக்காட்சியில் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை சகல தரப்பினரும் பயன்படத்தக்க நல்ல நிகழ்சிச்சிகள் ஒளிபரப்பாகின்றன. நாம் அவற்றை தவிர்த்து தொலைக்காட்சித் தொடர் நாடகங்களில் பிடியில் சிக்குண்டிருப்பதே தவிர்கப்படவேண்டியது. தொலைக்காட்சியின் பிடியில் நாம் சிக்காது எமது கட்டுப்பாட்டிற்குள் தொலைக்காட்சியை வைத்திருந்தோமானால் நாம் எமக்குக் கிடைக்கும் ஓய்வுக்கும் வசதிக்கும் ஏற்ப அதனைப் பயன்படுத்தி ஓய்வான நேரத்தைப் பயனுடையதாக்கலாம்.

## 5. Reference


1. சிவத்தம்பி,கா, (ஆண்டு?), **நுண்கலை எவை எவ்வாறு ஏன்**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
2. Gnoli, Raniero, (1985) **The Aesthetic Experience According to Abhinavagupta,** Chowkhamba Sanskrit Series office, Varanasi, India.
3. Aristotle, (1991) Edition, **The Politics,** (Trans). Benjamin Jowett, Electronically Enhanced Text, Copyright World Library.